**HMOP 60 of 2024**

Date : 11.11.2025

ம.சா.2 : பெருமாள்

ம.சா. 2 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

ஆறுமுகம் செல்வி என்னுடைய ஒரே மகள் ஆவார். திருமண பேச்சு வார்த்தை நடந்த போதே எதிர்மனுதாரர் வெளிநாட்டில் வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். திருமண பேச்சு வார்த்தை நடந்த போது ஒரு வருடத்திற்கு எத்தனை முறை வருவார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் மும்பையில் நியூஸ் பேப்பர் மொத்த ஏஜென்டாக இருந்தேன். எனக்கு கீழே சப் ஏஜெண்டுகள் இருந்தார்கள். நான் 25 முதல் 30 வருடங்களாக மேற்படி தொழிலை செய்து வந்தேன். என்னுடைய மகளும் மருமகனும் திருமணம் முடிந்து விருந்துக்காக 42 நாட்கள் மும்பையில் தங்கியிருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி விருந்துக்கு வந்திருந்த சமயத்தில் என் மகருமகன் சீக்கிரமாகவே நாங்கள் ஊருக்கு செல்கிறோம் என்று சொன்னார்கள் என்றும் ஆனால் நான் அதற்கு அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 42 நாட்களும் நான் செய்யும் பேப்பர் தொழிலை செய்ய சொல்லி முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. ஒரு நாள் மட்டும் அவரே வந்தார். அவரே போய்விட்டார். அது போல் மும்பையில் இருந்த சமயத்தில் எனது மனைவி ஆட்டோ கேரேஜ் உள்ளது என்றும் அதில் வேலைக்கு போக சொன்னார்கள் என்றும் அதற்கு என் மருமகன் சம்மதிக்கவில்லை என்றால் சரியல்ல. வெளிநாட்டில் வேலை பார்க்கும் போது மும்பையில் வேலைபார்க்க வேண்டிய அவசியமில்லை. மருமகன் வெளிநாட்டில் கைநிறைய சம்பாதிப்பதால் அவருக்கு எங்களுடன் வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க சம்மதம் இல்லை என்று அவர் சொல்லியதால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் நாங்கள் வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க சொல்லவில்லை. என் மகள் குழந்தை பேறு நடந்த போது அவருக்கு வளைகாப்பு விழா விமர்சையாக நடத்தப்பட்டது என்றால் நாங்கள்தான் நடத்தினோம். என் மருமகன் வெளிநாட்டில் இருந்து வந்திருந்தார் ஆனால் அந்த விழாவிற்கு வரவில்லை. என் மகளுக்கு குழந்தை பிறந்த சமயத்தில் குழந்தைக்கு என் மருமகனின் பெற்றோர்கள் செயின், மோதிரம், வளையல், கைச்செயின் ஆகியவை போட்டார்கள் என்றால் சரிதான். அந்த நகைகள் தற்போது மகளின்

மாமியார் வீட்டில் உள்ளது. என் மனைவி ஏர்வாடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியதில் ஆய்வாளர் விசாரணை செய்து ஆய்வாளர் என் மகளை சத்தம் போட்டு ஒழுங்காக இருக்க கூறினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விசாரணை சமயத்தில் காவல் நிலையம் சென்றிருந்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் மேற்படி விசாரணை முடிந்த பிறகு இறுதியாக எனது மகள் என் கணவர் என்னை தனிக்குடித்தனம் அழைத்து சென்றால் எனது கணவருடன் போக தயாராக இருக்கிறேன் என்று எழுதி கொடுத்தார் என்றால் அது பொய்யாகும். என் மகள் என்னிடம் தனிக்குடித்தனம் போறேன் என்று சொன்னதற்கு நான் சந்தோஷம் என்று சொன்னேன். ஆனால் மருமகன் கூட்டிச்செல்லவில்லை. என் மகளை நானும் என் மனைவியும் சேர்ந்து கருவேலன் குளத்தில் உள்ள முருகேசன் வீட்டில் இருந்து கடைசியாக அழைத்து செல்லும் போது என்னுடைய மருமகன் அவர் வீட்டில் இல்லை என்றும் வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரிதான். என்னுடைய பிரமான வாக்குமூலத்தில் 7 மற்றும் 8 ம் பத்தியில் எதிர்மனுதாரரும், அவரின் பெற்றோர்களும் என் மகளை ஏசியதாகவும், கொடுமை படுத்தியதாகவும் சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. என் மகளுக்கும், மருமகனுக்கும் எந்தவிதமான பிரச்சனையும் இல்லை என்றும் ஒருமுறை என் மருமகனும், மகளும் 1/2 மணி நேரம் பேசினாலே இருவரும் சேர்ந்துவிடுவார்கள் என்றால் சரியல்ல. இதுவரையிலும் எதிர்மனுதாரர் என் மகளுடன் பேசவில்லை. 1/2 மணி நேரம் என் மகளை பேச அனுமதிக்க முடியுமா என்றால் முடியாது. என் மருமகனுக்கும், எங்களுக்கும் வீட்டோடு மாப்பிள்ளை என்ற பிரச்சனை மட்டும்தான் உள்ளது என்றும் வேறு பிரச்சனை உள்ளது என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியிருக்கும் சங்கதிகள் தவறு என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

நான் தற்போது பணகுடி டீக்கடையில் வேலை பார்க்கிறேன். டீ போட்டுக்கொடுப்பேன் கேஷியராகவும் இருப்பேன்.